

உ

ஓம் ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ சாஸ்தா பஞ்சரத்ன ஸ்தோத்திரம்
## மற்றும்
# ஸ்ரீ ஐயப்பன் நமஸ்கார ஸ்லோகங்கள்

| | |
|---|---|
| 1. லோகவீரம் மஹாபூஜ்யம் ஸர்வரக்ஷாகரம் விபும் \|<br>பார்வதீ ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் \|\| | உலகின் மாவீரனாய் விளங்கி, உயரிய பூஜைக்குரியவனாய் திகழ்ந்து, எல்லோரையும் காத்து, செல்வத்தை அருள்பவனாகவும், பார்வதி தேவியின் உள்ளத்தை மகிழ்விப்பவனாக விளங்கும் ஐயப்பனை வணங்குவோம். |
| 2. விப்ர பூஜ்யம் விச்வவந்த்யம் விஷ்ணு சம்போப்ரியம் ஸுதம் \|<br>க்ஷிப்ரப்ரஸாத நிரதம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் \|\| | வேத விற்பனர்களால் பூஜிக்கப்பட்டவரும், உலகத்தாரால் வணங்கப் பட்டவரும், நாராயணன், பரமேஸ்வரன் இருவருடைய அன்புப் புத்திரனும், பக்தர்களுக்கு எளிதில் அருள்பவனுமாகிய சாஸ்தாவை வணங்குவோம். |
| 3. மத்த மாதங்க கமனம் காருண்யாம்ருத பூரிதம் \|<br>ஸர்வ விக்னஹரம் தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் \|\| | மதங்கொண்ட யானையைப் போன்று நடையை உடையவரும், கருணையாகிய அமிர்தம் நிறைந்தவரும், பக்தர்களுடைய எல்லா இடர்களையும் போக்குபவருமாகிய ஹரிஹரசுதனை நாம் வணங்குவோம். |
| 4. அஸ்மத் குலேச்வரம் தேவம் அஸ்மத் சத்ரு வினாசனம் \|<br>அஸ்மதிஷ்ட ப்ரதாதாரம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் \|\| | எங்களுடைய குல தெய்வமாகவும், எங்களின் பகைவர்களை அழிப்பவராகவும், எங்கள் விருப்பங்கள் யாவையும் நிறைவேற்றுபவராகவும் விளங்கும் பக்தஜனப் பிரியனை வணங்குவோம். |
| 5. பாண்ட்யேச வம்சதிலகம் கேரளே கேளிவிக்ரஹம் \|<br>ஆர்தத்ராணபரம் தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் \|\| | பாண்டிய வம்சத்தில் அழகு சேர்த்தவரும், கேரள தேசத்தில் தன் லீலைகளை புரிந்தவரும் வாழ்க்கையில் துன்புற்றவர்களை காப்பவருமான மணிகண்டனை வணங்குவோம். |
| 6. பஞ்சரத்னாக்யமேதத் யோ நித்யம் சுத்தப்படேன் நர: \|<br>தஸ்யப்ரஸன்னோ பகவான் சாஸ்த்தா வஸதி மானஸே \|\| | இந்த ஐந்து ரத்னங்கள் போன்ற பாடல்களை எவர்கள் தினந்தோறும் நல்ல மனத்துடன் பாராயணம் செய்கிறார்களோ அத்தகைய பக்தர்களின் மனதில் ஐயப்பன் மகிழ்ச்சியாக வாசம் கொள்கிறான். |
| 7. அருணோதய ஸங்காசம் நீலகுண்டலதாரிணம் \|<br>நீலாம்பரதரம் தேவம் வந்தேஹம் ப்ரும்மநந்தனம் \|\| | உதிக்கும் சூரிய ஒளியைப் போன்றவரும், நீலநிற குண்டலத்தை பூண்டவரும், நீல ஆடையை தரித்தவரும், ப்ரும்மஸ்வரூபமாக விளங்குபவருமான சாஸ்தாவை போற்றுவோம். |
| 8. சாபபாணம் வாமஹஸ்தே ரௌப்யவேத்ரஞ்ச தக்ஷிணே \|<br>விலஸத் குண்டலதரம் வந்தேஹம் விஷ்ணு நந்தனம் \|\| | இடது கையில் வில்அம்பு தரித்தவரும், வலக்கையில் வெள்ளையான தண்டம் கொண்டவரும் குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவருமான விஷ்ணு மைந்தனை போற்றி வணங்குவோம். |
| 9. வ்யாக்ராரூடம் ரக்தநேத்ரம் ஸ்வர்ணமாலா விபூஷணம் \|<br>வீரபட்டதரம் கோரம் வந்தேஹம் சம்புநந்தனம் \|\| | புலியைத் தன் வாகனமாக உடையவரும் சிவந்த கண்களை உடையவரும், சொர்ணாபரண மாலையை அணிந்தவரும், வீரயோகப் பட்டையை விருப்பத்துடன் தரித்தவரும், துஷ்டர்களுக்கு பயங்கரமானவருமான பரமேஸ்வரனுடைய மைந்தனை நாம் போற்றுவோம். |
| 10. கிங்கிண்யொட்யாண பூஷேஷம் பூர்ணசந்த்ர நிபானனம் \|<br>கிராதரூப சாஸ்தாரம் வந்தேஹம் பாண்ட்ய நந்தனம் \|\| | இடுப்பில் மணிகள் ஒலிக்கும் ஒட்டியாணம் பூண்டு அழகுற காட்சியளிப் பவரும், பௌர்ணமி நிலவுபோன்ற முகப்பொலிவு உடையவரும், விஸ்வரூபம் (நெடிய உருவம்) கொண்டவருமான பாண்டிய ராஜபுத்திரனை நாம் வணங்குவோம். |
| 11. பூதவேதாள ஸம்ஸேவ்யம் காஞ்சனாத்ரி நிவாஸினம் \|<br>மணிகண்டமிதிக்யாதம் வந்தேஹம் சக்தி நந்தனம் \|\| | பூதவேதாளங்களாகிய பரிவார தேவதைகளால் போற்றப் பெற்றவரும், தங்கமயமான மலையை தன்னுடைய இருப்பிடமாக கொண்டவரும் மணிகண்டன் என்ற நாமத்தினால் உலகில் பிரசித்தி பெற்றவருமான சக்திதேவியின் புத்திரனை புகழ்ந்து துதிப்போம். |
| 12. யஸ்ய தந்வந்தரீ மாதாபிதா ருத்ரோ பிஷக்தம: \|<br>தம் சாஸ்தாரமஹம் வந்தே மஹாவைத்யம் தயாநிதிம் \|\| | தன்வந்திரியை தாயாகவும், உலகத்திற்கே வைத்யனாக விளங்கும் பரமேஸ்வரனை தந்தையாகவும் கொண்டு மஹா மருத்துவராகி, கருணையே வடிவாகி புன்னகை ததும்பும் பாலனை போற்றுவோம். |
| 13. நக்ஷத்ரநாதவதனம் நாதம் த்ரிபுவனாவனம் \|<br>நௌமிதாசேஷ புவனம் சாஸ்தாரம் ப்ரணதோஸ்ம்யஹம் \|\| | மதியைப் போன்ற முகமுடையவரும், மூன்று உலகமும் கதியே என்று போற்றும் சாஸ்தாவை போற்றி வணங்குவோம். |
| 14. மன்மதாயுத ஸௌந்தர்யம் மஹாபூத நிஷேவிதம் \|<br>ம்ருகயாரஸிகம் சூரம் சாஸ்தாரம் ப்ரணதோஸ்ம்யஹம் \|\| | மன்மதனைப் போன்ற அழகுடையவரும், எல்லோராலும் வணங்கப் பெற்றவரும், வேட்டையாடுவதில் வேட்கையுடையவருமான சாஸ்தாவை வணங்கிப் போற்றுவோம். |
| 15 த்ரயம்பகபுராதீசம் கணாதிப ஸமன்விதம் \|<br>கஜாரூடம் அஹம் வந்தே சாஸ்தாரம் குலதைவதம் \|\| | திரியம்பக புரியில் உறையும் பரமனையும் விரிசடர் கணபதியுடனும் கூடியவரும் கரி மீது அமர்ந்து எங்கள் குல தெய்வமாக விளங்கும் சாஸ்தாவை வணங்குவோம். |
| 16. பூதநாத ஸதாநந்த ஸர்வபூத தயாபர \| (3 முறை)<br>ரக்ஷ ரக்ஷ மஹாபாஹோ சாஸ்த்ரே துப்யம் நமோ நம: \|\| | பூதகணங்களின் நாதனாய் நிற்பவரும் ஆதவனுக்கு ஒப்பாய் ஆனந்த மயமாகி திளைப்பவரும் நாதப்பிரும்மனாகி நாளும் கருணை புரிபவரும் கோதிலா நீள் கரத்தால் காப்பவனுமாகிய சாஸ்தாவை வணங்குவோம். |
| 17. ஓங்காரபூர்விகே தேவி வீணாபுஸ்தக தாரிணி \| (3 முறை)<br>வேதமாதா நமஸ்துப்யம் அவ்யாதித்வம் ப்ரயச்ச மே \|\| | ஓங்கார முதல்வியே! ஒப்பிலா வீணையும், ஓதிடும் நூல்கள் யாவும் கரத்துடையாய், வேதத்தின் தாயே, வெப்புடை நோய்கள் காதமே ஓடிட காத்தருள்வாய் தாயே. |
| 18. பூஜ்யாய ராகவேந்த்ராய ஸத்யதர்ம ரதாய ச \| (3 முறை)<br>பஜதாம் கல்பவ்ருக்ஷாய நமதாம் காமதேனவே \|\| | வணக்கத்திற்குரிய ராகவேந்திரரே, சத்ய தர்மத்தில் நிலைத்து நின்று பக்தர்கள் விரும்பும் விருப்பங்கள் தரவல்ல கற்பகதரு மற்றும் காமதேனுவைப் போன்ற தங்களை போற்றி வணங்குவோம். |

**ஒவ்வொரு ஸ்லோகம் முடிவிலும் ஸ்வாமியே சரணம் ஐயப்பா என்று மனமுருக கூறவும்**

## அகிலபாரத ஐயப்ப சேவா சங்கம், மச்சுவாடி கிளை